27 APR 1999


# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 13 திங்கட்கிழமை (26-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 128


# மாற்று அரசு அமைக்கும் முயற்சியை கைவிட்டதாக சோனியா அறிவிப்பு!

## வாஜ்பாயை அழைத்து ஜனாதிபதி ஆலோசனை

புதுடில்லி, ஏப்ரல் 26

மாற்று அரசு அமைக்கும் முயற்சியைக் காங்கிரஸ் கட்சி கைவிட்டுள்ளதாகக் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நேற்று அறிவித்துள்ளார். அத்துடன் மூன்றாவது அணி ஒன்று மாற்று அரசு அமைக்கும் முயற்சிக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்து காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அல்லது மூன்றாவது அணியின் தலைமையில் மாற்று அரசு அமைக்கும் கடந்த 9 நாள் முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன.

ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை நேற்றுச் சந்தித்த போதே சோனியா காந்தி காங்கிரஸ் தனது முயற்சியை கைவிட்டது குறித்துத் தெரிவித்தார்.

சோனியா காந்தி ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர், காபந்து அரசின் பிரதமர் வாஜ்பாயை ஜனாதிபதி அழைத்து நேற்றிரவு பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சனத் ஜெயசூரியா விவாகரத்துப் பெற்றார்!

### ரூ. 40 லட்சம் கட்ட உத்தரவு

கொழும்பு, ஏப்ரல் 26

இலங்கையின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரியா தமது மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற்றுவிட்டார்.

சுமார் ஒரு வருட காலத்துக்கு முன்னர் திருமணம் செய்த தமது மனைவியான சுமுது கருணநாயக்காவிடமிருந்து விவாகரத்துக் கோரி அவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்துவந்த மேலதிக நீதிபதி திருமதி ஜெராட்டின் கம்லத் விவாகரத்துக்கு அனுமதி அளித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

ஜெயசூரியா தமது மனைவிக்கு ஜீவனாம்சமாக மொத்தம் 40 லட்சம் ரூபாவை வழங்கச் சம்மதம் தெரிவித்ததையடுத்தே விவாகரத்துக்குச் சுமுகமாக இணக்கம் காணப்பட்டது.

ஜெயசூரியா தமது மனைவிக்குக் கொடுத்த 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடியில் பிஸ்ரல் குழு

யாழ். கொட்டடி மீன் சந்தைப் பகுதியில் புளொட் இயக்க உறுப்பினர்களை இலக்கு வைத்து பிஸ்ரல் குழு ஒன்று நேற்று நண்பகல் நடமாடியதாகக் கூறப்படுகின்றது.

வழமையாகக் கொட்டடி மீன் சந்தைக்கு மீன் வாங்குவதற்கு புளொட் இயக்கத்தினர் வருவதை அவதானித்து இந்தக் குழு அங்கு வந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

தமக்குக் கிடைத்த எச்சரிக்கைத் தகவலால் தாங்கள் உஷாரடைந்ததால் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாக புளொட் அமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி புளொட் யாழ். மாவட்ட பொறுப்பாளர் சதீஸ் நகரில் வைத்து பிஸ்ரல் குழுவால் சுடப்பட்டது தெரிந்ததே.

## அன்ரன் பாலசிங்கம் ஆஸி. புறப்பாடு

கொழும்பு, ஏப்ரல் 26

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னியில் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கம் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி சென்ற சமாதானக் குழுவினர் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு!

கொழும்பு, ஏப்ரல் 26

வன்னி சென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய சர்வமதக் குழுவின் பிரதிநிதிகள் இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அலரி மாளிகையில் சந்திக்கவிருக்கின்றனர்.

வன்னியில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, பேச்சுக்குத் தயாராகவிருப்பதாகப் புலிகள் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களைச் சர்வமதக்குழு ஜனாதிபதிக்குத் தெரிவிக்கும் என அந்தக் குழுவின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

வன்னியில் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்தும் அக்குழு ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறும்.

இந்தச் சந்திப்பையடுத்து இக்குழு மீண்டும் வன்னிக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3-164)

## மட்டக்களப்பு

## விமானத் தளம் மீது மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு, ஏப்ரல் 26

மட்டக்களப்பு, விமானப்படைத் தளம் மீது நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

மட்டக்களப்பு வாவிக்கு அப்பாலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து விமானப்படை முகாமிலிருந்து பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினபுரியில் இருந்து யாத்திரை

கொழும்பு, ஏப்ரல் 26

யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி இரத்தினபுரியில் இருந்து மடுவுக்கு இன்று சமாதான யாத்திரை ஒன்று இடம் பெறவுள்ளது.

இரத்தினபுரி ஆயர் அதிவண. மல்கம் ரஞ்சித் தலைமையில் புறப்படும் இந்த யாத்திரையில் 280 பேர் பங்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வெடிப்பில் திருநகரில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

குருநகர், திருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் இரு பெண்கள் உட்பட மூவர் காயம் அடைந்தனர்.

ராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த அற்புதன் கலிஸ்ரா [வயது 14], அற்புதன் ஜெயக்குமார் [வயது 24], அந்தோனி மடுத்தின் றெஜி (வயது 24) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்தது.

ரோந்து சென்ற படையினரை நோக்கி கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

சம்பவத்தில் காயம் அடைந்த பொதுமக்களை படையினர் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் —

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் மோதல் இரு பெண்கள் உயிரிழப்பு

### 15 பேர் காயமடைந்தனர்

மட்டக்களப்பு, ஏப்ரல் 26

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இடையில் அகப்பட்டு இரு பெண்கள் உயிரிழந்தனர். ஏழு பெண்கள் உட்பட 15 பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை ஏறாவூரில் பொலீஸ் முன்னணி காவல் நிலையங்கள் உள்ள பகுதியில் இந்த மோதல் இடம்பெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வா சிலை திறப்பு விழா: கலந்துகொண்டு நினைவுகூர அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

இன்று காலை நடைபெறும் தந்தை செல்வாவின் சிலைத் திறப்பு விழாவில் ஆத்மபலத்துடன் ஒன்றுகூடி தந்தை [illegible] கூர வருமாறு தந்தை செல்வா நினைவுத் தேசிய அவை பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக சபையின் இணைச் செயலாளர் மாவை, சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தந்தை செல்வா நூற்றாண்டு நிகழ்ச்சிகள் சென்ற ஆண்டு 'மார்ச்' 31 முதல் நிகழ்ந்து வருகின்றன.

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 'சிறிஞ்' சுடன் வருமாறு வார்ட்டில் அறிவுறுத்து

## யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்.போதனா வைத்திய சாலையில் பரிசோதனைக் காக இரத்தம் எடுப்பவர் களும், ஊசி மூலம் மருந்து ஏற்ற வருபவர்களும் சொந்த மாக சிறிஞ்ஊசிகள் கொண்டு வருமாறு ஆஸ்பத்திரி நிர் வாகத்தினால் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இது தொடர்பான அறி விப்பு அட்டைகள் வார்ட்டுக் களில் காணப்படுகின்றன.

பரவிவரும் எய்ட்ஸ் நோயி லிருந்து பாதுகாப்புப்பெறும் நோக்குடனேயேஇவ்வாறான ஆலோசனை தெரிவிக்கப்படு வதாக ஆஸ்பத்திரி வட்டா ரங்கள் தெரிவித்தன,

# சந்தைக் கட்டடம் புனரமைப்பு

திருநெல்வேலி, ஏப்ரல் 26

கோண்டாவில் ரயில் நிலை யத்திற்குச் சமீபத்திலுள்ள சந்தைக் கட்டடம் நல்லூர் பிரதேச சபையினால் புன ரமைப்புச் செய்யப் பட்டு வருகின்றது. மீன் சந்தைக்கான கட்டடம் ஒன்றும் நிறுவப்பட்டு வருவ தாக பிரதேசசபை வட்டா ரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

கொக்குவில் உப அலுவலக பொது நூலகத்திற்கும், அங் குள்ள கேட்போர் கூடத்திற் கும் மின்சார இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. மாலை நேரத்தில் இந்த நூலகத்தில் வாசகர்கள் வசதியாக இருந்து படிப்பதற்காக அதற் கேற்ற விதத்தில் மின் ஒளி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித் தன.

(ஐ-135)


# றெனி மூக்குக்கண்ணாடி அகம்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

தனது கிளை நிலையம் ஒன்றை

இன்று (26-04-99) முதல்

RENNY OPTICIANS

இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் ஆரம்பிக்கின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

✆ இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

✆ இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

✆ கண்டி வீதி, சாவகச்சேரி.

(65181)


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் செல்லையா

(இளைப்பாறிய உபஅதிபர், சென். ஜோசப் கல்லூரி. பண்டாரவளை)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லையா அவர்கள் 25-04-99 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் அன்புமகனும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், Dr. நச்சினார்க்கினியன், இந்துமதி ஆகியோரின் தகப்பனாரும் சறோஜா தேவி, சண்முகம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தில்லைநாதன் ஆகியோரின் மூத்த சகோதரனும் திருமதி சர்வேந்திரன் நாரணி, பூரணி, சுபாஷினி, குணாளன், லாகினி, சலினி, மணிவண்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-04-99) திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

Dr. செ சுரேந்திரன் நச்சினார்க்கினியன்

''பழமுதிர்சோலை'',
126, பொற்பதி வீதி,
கொக்குவில்.

(65180)

## சிதம்பரப்பிள்ளை லோகநாதன்

[நீர்ப்பாசனப் பொறியியலாளர் – பெரியமடு]

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை லோகநாதன் அவர்கள் 24-04-99 அன்று இரவு 11-30 மணியளவில் காலமானார்.

அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற ச முருகேசு [ஓய்வுபெற்ற A O], உமாதேவி தம்பதிகளின் மூத்த மருமகனும், நந்தகோபால் [பொறியியல்பீட முதலாம் வருட மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்], நிரஞ்சனா, நந்தரூபன் [மாணவன், ஹாட்லிக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சறோஜினி தேவி பாலகிருஷ்ணன், திரு.சி. பாலகிருஷ்ணன் [U.K] ஆகியோரின் அன்புச் சகோதரனும், தி க. பாலகிருஷ்ணன் [சட்ட ஆலோசகர் கொழும்பு], வா. அன்பரசி [U K], திரு.மு. சிவபாலன் [ஆஸ்திரேலியா], திரு மு. சிவசங்கரம் [கனடா], திரு மு. விநாயகமூர்த்தி [U S A] திருமதி கலைவாணி கைலாசநாதன் [ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி], திருமதி கலையரசி பாஸ்கரன் [கொழும்பு], செல்வி. மு. கலாதேவி [ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை] ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு கோபாலபிள்ளை கைலாசநாதன் [தென்மராட்சிக் கல்வி வலயம்], திரு நடராசா பாஸ்கரன் [கொழும்பு] ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

திருமதி வி. லோகநாதன்

சன்பொல்லை வீதி,
கரவெட்டி.

[65171]

### வைத்திய கலாநிதி

## சிவஞானம் கனகரத்தினம்

உரும்பிராய் இரத்தின வைத்தியசாலை உரிமையாளரும், சித்த ஆயுர் வேத வைத்தியரும் முறிவு நோவு விசேட வைத்தியருமான Dr. எஸ் கனகரத்தினம் 23—04—99 வெள்ளிக்கிழமை இரவு சிவபதம் அடைந்தார்.

அன்னார் டாக்டர் கோபதி அம்மாவின் பாசமிகு அன்புக் கணவரும், சந்திரரத்தினம் (ஆசிரியர், முத்துத் தம்பிமகா வித்தியாலயம்), ஜெயபாலரத்தினம் (ஆசிரியரும், முறிவு நோவு வைத்தியரும்), டாக்டர் அருள்ஜோதி (ஜேர்மனி), கோபாலரத்தினம் (சுவிஸ்), திலகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராயில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் 24—04—99 சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

மனைவி, மக்கள்

இரத்தினம் வைத்தியசாலை,
உரும்பிராய்.

(65179)


# ராஜா

யாழ்ப்பாணம்.

சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த

காதலே நிம்மதி

இன்று காட்சிகள்
10-30, 2-00

# ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்
பதினொராவது நாளாக
ரஜனி - சிவாஜி
சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த

படையப்பா

இன்று காட்சிகள்
10-30, 2-30

(சி/7301)

# நாகம்ஸ்

சுன்னாகம்
இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த

மின்சாரக் கனவு

காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)

(65145)

# லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
10-30 A M.
ரஜனி - சௌந்தர்யா

படையப்பா

2-30 P.M
விஜயகாந், சூர்யா

பெரியண்ணா

FOREIGN T.P. No.
0094 -70 -212223

(64970)

# சிவா திரை

சிவன் கோயிலடி
யாழ்.
தினசரி: 10-30, 2 30
T. ராஜேந்தரின்

மோனிசா என் மோனலிசா

(புதிய வெளியீடு)

(சி/7309)


# கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
தலைமை அலுவலக எழுதுநர்
கு. குணரூபன்
அவர்களின் அன்புப் பாட்டனார்

## காசிப்பிள்ளை கனகரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
பளை பிரதேச சபை.

(சி/7307)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கங்களின் ஸ்தாபக அங்கத்தவரும்
ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்களத்தின்
கலெக்டருமான

## வேலுப்பிள்ளை குமாரசாமி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

செங்குந்த இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
இளைஞர் கலாவிருத்திச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.

(சி/7306)

# மரண அறிவித்தல்

## நடராசா கந்தஞானியார்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொட்டாஞ்சேனையை தற்போது வதிவிடமாகக் கொண்டவருமாகிய அராலி ஞானியார் கோயில் தர்மகர்த்தாவும் இளைப்பாறிய அராலி உப தபாலதிபருமாகிய நடராசா கந்தஞானியார் 25-4-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. க. நடராசா (அதிபர்) திரு. க. அருணகிரிநாதன் (உப தபாலதிபர்), திரு. க. ஞானசம்பந்தன் (இலங்கை வங்கி), திருமதி இ. நாகேஸ்வரி (லண்டன்), திருமதி வி. ஜெகதீஸ்வரி (கொழும்பு), திருமதி ந. ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. க. விக்கினேஸ்வரகடாட்சம் (பல்வைத்தியர்), திரு. பொ. இளையதம்பி (லண்டன்), திரு. பொ நகுலேஸ்வரன் (லண்டன்), திருமதி ந. அமிர்தமலர், திருமதி அ. கோமதி, திருமதி ஞா. சரஸ்வதி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-04-99 அன்று கொழும்பு கொட்டாஞ்சேனை இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

க. நடராசா
(அதிபர், யா / பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(65182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுதங்களுடன் சென்ற ஈரான் விமானம் தலிபான் பிடியில்

காபூல், ஏப்ரல் 26

தலிபானுக்கு எதிரான கூட்டணிக்கு ஆயுதங்களை ஏற்றிச்சென்ற ஈரானிய சரக்கு விமானம் தலிபானால் கடத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன,

நிலத்தில் இருந்து விண்ணுக்குப் பாயும் ஏவுகணைகள் உட்பட கனரக ஆயுதங்கள் இந்த விமானத்தில் ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை தலிபானுக்கு எதிரான கூட்டணியினர் கைப்பற்றிய பாமியான நகருக்கு சென்ற போதே விமானம் தலிபானால் வழிமறித்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதமும் ஈரானால் தலிபானுக்கு எதிரான கூட்டணிக்கு எழுநூறு தொன் ஆயுதங்களுடன் அனுப்பப்பட்ட ரயில் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

இதே வேளை—

அண்மையில் ஐ. நாவின் ஆதரவுடன் தலிபானுக்கும் தலிபானுக்கு எதிரான கூட்டணிக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து விட்ட நிலையில் தற்போது ஆப்கானிஸ்தானில் மீண்டும் போர்ச் சூழல் உருவாகியுள்ளது, (ஐ-க)

## ராட்சத ஹெலிகள் அல்பேனியா விரைவு



அமெரிக்காவின் அதிநவீன தாங்கி எதிர்ப்பு ஹெலிகள் இத்தாலியில் உள்ள தளம் ஒன்றில் இருந்து அட்லாண்ட்டிக் கடலைக் கடந்து அல்பேனியாவுக்கு விரைகின்றன, 'நேட்டோ' படைகள் கொசோவோவில் தரைவழித் தாக்குதல்களைத் தொடங்கும் போது சேர்பிய தாங்கிப் படைகளுக்கு எதிராக இந்த ஹெலிகள் தாக்குதலில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'ஏ. எச் - 64' அல்லது அபாச்சி (Apache) எனப்படும் இந்த ராட்சத ஹெலிகள் பீதியூட்டும் தோற்றத்தைக் கொண்டவை ஆகும். (ஐ)

## இந்தியாவில் கடும் வெயில்; இதுவரை 40 பேர் பலி!

புதுடில்லி, ஏப்ரல் 26

இந்தியாவின் பல பகுதிகளிலும் கொளுத்தும் வெயிலுக்கு இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரிசாவில் மட்டும் வெயிலின் கொடுமையால் இறந்தவர்களின் எண்ணிக்கை இதுவரை 28 ஆக அதிகரித்துள்ளது.

அந்த மாநிலத்தில் பல பகுதிகளிலும் வெயில் 42 இல் இருந்து 44 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது.

தலைநகரில் இம்முறை கோடைகாலத்தின் உச்சக் கட்டமாக வெப்பநிலை 42.3 டிகிரி செல்சியஸை எட்டியுள்ளது. இது வழக்கமாக இருப்பதை விட 5 டிகிரி செல்சியஸ் கூடுதலாகும்.

கடுமையான வெயிலின் காரணமாக டில்லியில் மக்கள் தெருக்கள் மற்றும் கடை வீதிகளுக்குச்செல்லாமல் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். (ஐ-ரீ)

## அமெரிக்கப் பள்ளிகளில் துக்கம் அனுஷ்டிப்பு!

### மாணவரை சந்தித்து கிளின்ரன் ஆறுதல்



வாஷிங்ரன், ஏப்ரல் 26

அமெரிக்காவை அதிர்ச்சியில் உறைய வைத்த கொலராடோ உயர் நிலைப் பள்ளியில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு துக்கம் தெரிவிக்கும் நிகழ்வுகள் பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றன. அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறுவதுடன் பாடசாலைக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

13 பேர் படுகொலையுண்ட கொலம்பியன் உயர்நிலைப் பள்ளியின் சமையல் அறையில் இருந்து இரண்டு பெரிய குண்டுகளைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். முழுப் பாடசாலையையும் தரைமட்டமாக்குவதற்காகவே இக் குண்டுகள் அங்கு வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகிறது. இந்தக் குண்டுகளைக் கொலையாளிகளான இரு மாணவர்கள்தான் உள்ளே எடுத்து வந்தனரா அல்லது அவர்களுக்கு வேறு எவராவது உதவியுள்ளனரா என்பது குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் சம்பந்தப்பட்ட பெரும் வன் முறைகள் அதிகரித்து வருவதை அடுத்து அதிபர் கிளின்ரன் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மாணவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறார்.

அலெக்சாண்டிராவில் உள்ள ரீ. சீ. வில்லியம்ஸ் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுடன் கிளின்ரன் உரையாடுவதைப் படத்தில் காணலாம். [ஐ]

## தேர்தலுக்கு ஆயத்தம் செய்ய 75 நாள் அவகாசம் தேவைப்படும்

### இந்திய தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 26

இந்தியாவில் இடைத்தேர்தல் நடத்துவதென்றால் 20 கோடி டொலர்கள் செலவாகும் என்றும் —

வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள 60 கோடி மக்களைப் பாதுகாக்க லட்சக்கணக்கான இராணுவத்தினரும் பொலீஸாரும் தேவைப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் மற்றுமொரு இடைத்தேர்தல் நடைபெறுவதை பெரும்பாலானவர்கள் ஆதரிக்கவில்லை; அப்படி ஒரு தேர்தல் நடந்தால் அது 3 வருடங்களில் நடைபெறும் 3 ஆவது தேர்தலாக அமையும்.

1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பொதுத்தேர்தலுக்கு ஆயத்தம் செய்யக் குறைந்தது 75 நாள்களாவது தேவை என்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

முதலாவதாக நாட்டில் அமைக்கப்பட வேண்டிய 9 லட்சம் வாக்களிப்பு நிலயங்களில் பணியாற்ற 45 லட்சம் பேரைத் திரட்ட வேண்டி இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-ரி)

## இந்தியாவில் 3 ஆவது அணி அரசமைப்பதிலும் இழுபறி

புதுடில்லி, ஏப்ரல் 26

மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசுவை பிரதமர் வேட்பாளராகக்கொண்டு அரசு அமைக்க வாய்ப்பு இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற கட்சியின் ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தின் பின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

மத்தியில் காங்கிரஸ் கட்சியால் மட்டுமே நிலையான ஆட்சியை அமைக்க முடியும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்கிரட் சிங் சுர்ஜித் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சி அரசு மீண்டும் ஆட்சிக்கு வருவதைத்தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த நிலைப்பாடு இந்தியாவில் மூன்றாவது அணி அரசு ஒன்றை அமைப்பதில் இழுபறி நிலையைத் தோற்றுவித்துள்ளது. (ஐ)

## குண்டு வெடிப்பு

லண்டனில் நேற்று இரண்டாவது தடவையாக குண்டு ஒன்று வெடித்தது. இதில் ஐவர் காயமடைந்தனர்.

ஆசிய சமூகத்தினர் வாழும் பிறிக்லைன் என்ற விடுதிக் கருகிலேயே இந்தக் குண்டு வெடித்துள்ளது. இதனால் அருகில் உள்ள கட்டடங்களின் கண்ணாடிகள் நொருங்கி வீழ்ந்துள்ளன.

தனது காரில் குண்டு இருந்த பொதியைக் கண்ட சாரதி அப்பொதியை கார்டிக்கியில் வைத்துக் கொண்டு பொலீஸ் நிலையத்திற்கு சென்ற போதே குண்டு வெடித்ததாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவத்திற்கு வலது சாரித் தீவிரவாதிகள் குழு ஒன்று பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதே சமயம்—

கடந்த 17ஆம்திகதி லண்டனில் இடம் பெற்ற முதலாவது குண்டு வெடிப்பில் 39 பேர்வரை காயமடைந்தனர். எனினும் இச் சம்பவத்திற்கு எவரும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தந்தை செல்வா சிலை திறப்பு விழாவில்....

(முதலாம் பக்கத் தொடர்)

தந்தை செல்வா நூற்றாண்டு நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாகத் தமிழர் வாழும் வெளிநாடுகளிலும் கொண்டாடப்பட்டுள்ளன, பல மொழிகளிலும் கட்டுரைகளும், செய்திகளும் வெளிவந்தன.

தந்தை செல்வா காலத்தில் வாழ்ந்து, அவருடன் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்ட, சிறையிருந்த பல தலைவர்கள் இன்றில்லை. இருப்பினும் தமிழ் பேசும் மக்களிடத்திலே இருந்து வருகின்ற ஒரு நம்பிக்கை என்னவெனில் ''தந்தை செல்வா என்றும் எம்மைக் கைவிடமாட்டார்'' என்பதுதான். இந்த ஆத்ம நம்பிக்கையின் சின்னமாகத்தான் தந்தை செல்வாவின் நூற்றாண்டு முழு உருவச்சிலை அன்னார் மறைந்த நாளான் 26-04-99 இன்று யாழ். நகர் தந்தை செல்வா (தூபி) நினைவிட முன்றலில் திறந்து வைக்கின்றோம்.

தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசிய அவைத் தலைவர், மு. சிவசிதம்பரம் தலைமையில் பல துறை அறிஞர்களையும், தொழில் வல்லுனர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயற்குழுநிறுவப்பெற்றிருக்கிறது. அவ்வாறே யாழ். மாவட்டத்திலும் யாழ். பல்லைக்கழக அறிஞர்கள் தலைமைத்துவத்தில் யாழ். செயலவை இயங்குகிறது.

தந்தை செல்வா பற்றிய வரலாற்று நூல் மூத்த வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையிலான தகை சான்றோரால் எழுதப்படுகிறது.

போர்ச் சூழலிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டின் இராணுவ ஆயுதச் சூழலிலும் ஆத்மபலத்துடன் இந் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்த யாழ். அவை. உயிர்த்துடிப்புடன் அச்சொட்டாகச் சிலை வடித்த சிற்பி, திரையில் வர்ண்ணந் தீட்டிய ஓவியர் உட்பட ஒத்துழைத்த அனைவருக்கும் உதவிய அரச ஊழியர்களுக்கும், மாணவர்கள் தங்கள் கல்வி நிறுவனங்களிலும், வர்த்தகர்களும் சிறு துளியாக ஏன் கண்ணீர்த் [illegible] [illegible] கும் நன்றியுடையவர்களாவோம்.

இறுதியாக அரை நூற்றாண்டு காலம் இன விடுதலைப் போராட்டத்தினாத ஆயுதப் போரினால் அழிந்துல் இழந்தும், அல்லற்பட்டும் அவலத்துடன் ஏக்கத்துடன் கண்ணீரும் கம்பலையுமாய் துவண்டு கிடக்கின்ற எம் மக்களுக்கு ஒரு கருத்தை தந்தை செல்வா மறைந்த நாளான இன்று கூறி வைக்க விரும்புகிறேன்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்படு முன் தன்னைச் சந்தித்த வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் பாடிய அரபுக்கவிதை இது தான் —

''செத்துப்போனவர்களுக்காகத் துவண்டு மடிந்து போகாதே, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் போராடு'' என்பது தான்;

அடுத்து, ஐரிஸ் விடுதலை வீரன் மைக்ஸ்வைனி (Mcs wieny) சிறையிலிருந்து மடிந்து போகுமுன் கூறினான்,

''துன்பத்தைக் கொடுப்பவர்களல்ல, அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்பவர்களே இறுதியில் வெற்றி பெறுவர்'' என்பதுதான்.

இக்கருத்துக்களைப் புரிந்து கொண்டு ஆத்மபலத்துடன் தந்தை செல்வா நினைவிடத்தில் 26-4-99 இன்று காலை ஒன்று கூடுவோம், தந்தை செல்வாவை நினைவு கூருவோம் வாருங்கள் எனப் பணிவன்புடன் அழைக்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வட்டு. தெற்கு வட்டுக் கோட்டையைச்சேர்ந்த பரமநாதன் சாந்தகுமார் என்பவருடைய விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த அடித்துண்டும் சங்கானையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து J/165, வட்டு. தெற்கு கிராம சேவையாளரின் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

[65167]

## விண்ணப்பப் படிவம்

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாபறா மல்வேணி கணனிப் பயிற்சிக்கு சேர்வதற்கான படிவம் விற்பனையாகின்றது. நாயக பாலன், மானிப்பாய்.

(65169)

## ஆசிரியர் தேவை

6,7,8, கணிதம், 9, 10.11 சமயம் ஆகியன கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். இயக்குநர் அக்கடமிலேன். (நல்லூர் கோயில் முன்பாக) நல்லூர்

[65156]

## யாழ்ப்பாணம்

அராலியூர் ந சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1 யாழ்ப்பாணத்தில் அந்த ஆறும தங்கு இ ம்பெயர்வின கதை. 2 யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல், 3 நாடகம் எழுதுவது எப்படி? அக்கரைச் சீமையில் நாவல்,

[65153]

## சொற்பொழிவு

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்திஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சண்முகானந்த சபையினர் நடத்திவரும் சமயச் சொற்பொழிவில் இன்று திங்கட்கிழமை 'முருகா எனும் நாமங்கள்' என்ற தலைப்பில் கலாநிதி ஆ தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு சு. வேலாயுத பிள்ளை சொற்பொழிவாற்றுவார்.

(க-)

## விற்பனைக்கு

SHARP புரொஜெக்ரர் (200'') புதிய பல்ப்புடன் மற்றும் Sunsui Mixer (புதியது) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சீ. கனகசபை 42/7. ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(65121)

## மணமகள் தேவை

லண்டனில் இருந்து விடுமுறையில் வந்துள்ள, ஜாதகத்தில் உதயச் செவ்வாய் உள்ள நற்குணமுடைய 27 வயது மணமகனுக்கு நற்குணமுள்ள அழகிய மணமகள் தேவை. சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படமாட்டாது. ஏனைய விவரங்களுக்கு ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். ஊர்மிளா போட்டோ, 3-ம் கட்டை, கல்வியங்காடு.

[65138]

## ஓராம் ஆண்டின் நினைவில்



அமரர்

**கந்தையா முத்தையா**

(இளைப்பாறிய ஆசிரியர், முன்னாள் முகாமையாளர். கச்சேரி — நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சிஅம்பாள் தேவஸ்தானம்)

ஜனனம் 18 — 10 — 1912    அஸ்தமனம் 06 — 05 — 1998

நீங்கள் எம்மைவிட்டு உடலால் பிரிந்தும் உள்ளத்தால் பிரியாது எமது நெஞ்சங்களில் நிறைந்துள்ளீர்கள். தாங்கள் சிவபதம் எய்திய ஓராம் ஆண்டில் (ஏகாதசி திதி) இன்று உங்களை உற்றார், சுற்றத்தவர்களுடன் நினைவு கூருகின்றோம்.

**மக்கள், மருமக்கள், சகோதரி. பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

69A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(65148)


ALL PURPOSE MULTI DIRECTIONAL

**KOBE-52**



TV/RADIO ANTENNA

பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place, (Behind Milk Bar) Bambalapitiya Junction, Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/7201)


## நீங்காத நினைவுகளில் ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 – 09 – 1922



விண்ணில் 26 – 04 – 1998

**திருமதி யுவக்கீன் கிறேஸ்**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் இதயம்
காலங்கள் மாறும் போது
உம் நினைவுகளும் மறந்திடுமோ?
கல்லாக உம் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும்!

உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

03, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி.

(65175)

## சாவகச்சேரி நகரசபை

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 07-05-1999 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | சாவகச்சேரி பொதுச்சந்தை தேங்காய்க் கொட்டகை மீள்நிர்மாணம் | 3,500/- | 500/- |
| 02. | வட். 5, தேவாலய வீதி தாரிட்டுத் திருத்துதல் | 3,000/- | 500/- |
| 03 | வட். 7, சற்கழி 1 ஆம் ஒழுங்கை தாரிட்டுத் திருத்துதல் | 2,500/- | 500/- |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 5 - 5 - 99 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேற்குறித்த கேள்விப் பணத்தையும், கேள்விபபத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மு. செ. சரவணபவ**
**செயலாளர்,**
**நகரசபை, சாவகச்சேரி.**

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி
22 - 04 - 1999

(சி/7205)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 08 – 12 – 1970



இறைவன் அடியில் 28 – 01 – 1999

**அமரர் குணபாலா அன்ரன் பிறேமசிறி**

[சனத்]

கண்ணீர் திவலைகள் இன்னும் காயவில்லை ஐயா!
உணர்வலைகள் நெஞ்சை வதைக்கிறதையா
காலனுக்கு இரையான துர்ப்பாக்கியம் நிகழ்ந்ததெப்படி?

நாம் செய்த குறை தவமோ சொல்லையா......
எம் இல்ல அகல்விளக்காய் ஆனவனே......
அன்றில் பறவையான உன் அன்னை இங்கே...
அழுது ஏங்கும் உன் சோதரங்கள் இங்கே...
ஓட்டி உறவாடிய சுற்றம் இங்கே...
உன்னை ஏற்றிப் போற்றிய நண்பர்கள் இங்கே
நெஞ்சம் உள்ளவரை உன்கதை சொல்வார்கள்.

இவரின் ஆத்மசாந்திக்காக 26 - 04 - 1999 அன்று காலை 10 30 மணியளவில் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

எம் சோதரனின் இறந்த செய்திகேட்டு எம் இல்லத்திற்கு வருகைதந்து கடிதங்கள் மூலம் அனுதாபமும் ஆதரவும் தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், குருக்கள், துறவிகளுக்கும் எம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

— குடும்பத்தினர்

தாளையடி.

(65093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### சிவபுராண மனனப்போட்டி

சுழிபுரம், ஏப்ரல் 26

திருத்தொண்டர் சபையினர் சிவபுராண மனனப் போட்டியை நடத்த உள்ளனர்.

முதலில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களை மனனம் செய்வித்து பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவபுராணம் மனனம் செய்பவர்களுக்கு திருவாசகம் முழுதும் கொண்ட ரூபா நூறு பெறுமதிமிக்க நூல் பரிசாக வழங்கப்படவுள்ளது. [க-28]

### பத்திரிகைகள் திருட்டு

கோண்டாவில், ஏப்ரல் 26

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் பொது மக்கள் வாசிப்பதற்காக வைக்கப்படுகின்ற பத்திரிகைகள் அன்றைய தினமே விஷமிகளால் திருடிச் செல்லப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் பத்திரிகை படிப்பதற்கென வரும் வாசகர்கள் ஏமாற்றமடைய வேண்டியுள்ளது.

இதனை அடுத்து இந்து வாலிபர் சங்க செயற்குழுவினர் விஷமிகளுக்கு எதிரான ஓர் எச்சரிக்கைப் பலகையை அவ்விடத்தில் நிறுவியுள்ளனர். [க-ரி]

### மாணவர் கௌரவிப்பு

கோண்டாவில், ஏப்ரல் 26

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களான நவதீபன் நவரட்ணம், சுஜிதா சுந்தரலிங்கம் ஆகியோர் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமியால் அண்மையில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மோதிரம் மற்றும் வீதியில் கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் என்பவற்றை அதிபரிடம் ஒப்படைத்தமையைப் பாராட்டியே கௌரவிக்கப்பட்டனர். (க-ரி)

### சிறுதானியம் நல்ல விளைச்சல்

வலி.தென்மேற்கு, ஏப். 26

நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வரும் விவசாயி ஒருவர் நவாலி மேற்கில் நல்ல பயனைப் பெற்றுள்ளார்,

நவாலி மேற்கு களையோடை அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள நங்கன் குளத்து நீரைப் பயன்படுத்தி நெற்செய்கை பண்ணிய சி. மூத்ததம்பி (சம்பர்) என்பவருக்கே நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

இவரது சிறுபோக நெற்செய்கையை வலி. தென்மேற்கில் உள்ள விவசாயிகள் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ-185)

### வெங்காயச் செய்கை

வரணி, ஏப்ரல் 26

வடமராட்சி கிழக்கு குடத்தனை, அம்பன், நாகர்கோவில், செம்பியன்பற்று பகுதிகளில் மிளகாய், வெங்காயச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெருமளவு விவசாயிகள் இப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (க-171)

# பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கு மேலும் 53 மாணவருக்கு அனுமதி

## இன்றே பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

1997/98 ஆம் கல்வி ஆண்டில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் — பௌதிக விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடரவென மேலும் 53 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

மேற்படி அனுமதியைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் —

குறித்த மாணவர்கள் இன்று திங்கட்கிழமை முதல் தமது பதிவுகளை மேற்கொண்டு உடனடியாக விரிவுரைகளில் கலந்து கொள்ளலாம் எனவும் —

துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## 'மாக்பெட்' வருடாந்தகூட்டம்

# தனிச் சிங்களத்தில் அழைப்புக் கடிதம்

கொழும்பில் உள்ள சிறிலங்கா கூட்டுறவுச் சந்தைப் படுத்தல் சமாசத்தின் (மாக்பெட்) வருடாந்தக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் தனிச் சிங்களத்திலே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்த அழைப்புக் கடிதத்தை மீண்டும் மாக்பெட் நிறுவனத்திற்குத் திருப்பி அனுப்பி வைத்துள்ளார்.

''மேற்படி கூட்டத்திற்கான அழைப்புக் கடிதம் தனிச் சிங்களத்திலே உள்ளமை எமது அரசமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

''அத்துடன் நீண்ட காலமாக இதுபோன்ற காரணங்களால் தங்கள் அமைப்பின் அங்கத்துவ உரிமைகளை நாம் பிரயோகிக்கவில்லையென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்'' — என்று மாக்பெட் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில சீ. வீ. கே. சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-17)

# பளை நகரப்பகுதிக்கு விரைவில் மின்சாரம்

தென்மராட்சி, ஏப்ரல் 26

பளை நகர்ப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. மின்சார விநியோகத்திற்கான மின் கம்பிகள் பொருத்தும் வேலைகள் துரித கதியில் இலங்கை மின்சார சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்இணைப்பு வேலைகள் முடிவுற்றதும் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## யாழ். மாவட்டத்தில்

# முகாம்களில் உள்ளோர் விவரங்கள் சேகரிப்பு

மூளாய், ஏப்ரல் 26

யாழ். மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக யாழ். செயலகம் மாதாந்தம் விவரம் சேகரித்து வருகிறது.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் இன்னமும் மக்களின் மீளக்குடியமர்வுக்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் செயற்படும் நலன்புரி நிலையங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்கியுள்ளன. இவ்வாறு தங்கியுள்ளவர்களின் நிலைவரம் குறித்து மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ். செயலகம் சகல பிரதேச செயலகங்களையும் கோரியுள்ளது. (க-9)

## டிப்ளோமா பயிற்சி

கொழும்பு, ஏப்ரல் 26

திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சின் மேலதிக செயலாளரினால் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 25 செயற்றிட்ட உத்தியோகத்தர்களுக்கான பட்டத்தின் பின் மேல் டிப்ளோமா பயிற்சி நெறி கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறி அடுத்த மாதம் தொடக்கம் மூன்று மாத காலத்துக்கு நடைபெறவுள்ளது.

வடகிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும்பயிற்சித்திணைக்களப் பணிப்பாளர் எம். ஏ. சி. முகைதீனின் முயற்சியினால் மாகாண பிரதம செயலாளர் ஜீ கிருஸ்ணமூர்த்தி மற்றும் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஆகியோரின் ஒத்துழைப்புடன் இப்பயிற்சி நெறி நடைபெறவுளது. (ஐ-5)

## வீதி திருத்தக் கோரிக்கை

அரியாலை, ஏப்ரல் 26

யாழ். மருதடி வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் யாழ். மாநகர ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதிகடந்த பலவருடங்களாகதிருத்தப்படாமல் மண் வீதியாகக் காணப்படுகிறது.

மழைகாலங்களில் இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது.

இதனையடுத்தே இப் பகுதி மக்கள் கையொப்பம் இட்டு மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். (ஐ-17)

# சமூகபாதுகாப்புத் திட்டத்தை அமுல் செய்யும் பணி ஆரம்பம்

மூளாய், ஏப்ரல் 26

யாழ் மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களம் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் மேற்படி சமூக பாதுகாப்புத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் கையேடுகள், பிரசுரங்கள் ஆகியவை சமூக சேவைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக பிரத்தியேகமாக சமூக பாதுகாப்புச்சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சமூக பாதுகாப்புச் சபையே ஒவ்வொரு மாவட்டங்களிலும் இத்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் அமுலாக்கல் விடயங்களைக் கண்காணித்தும் ஒருங்கிணைத்தும் வருகின்றது.

சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஆண், பெண் இருபாலாரும் இச்சமூக பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

மேற்படி திட்டத்தின் மேலதிக விவரங்களை கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது சமூக சேவை உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ள முடியும். (ஐ-99)

## வலி. மேற்கில்

# அறநெறிப் பள்ளிகளுக்கு தளபாடம் விநியோகம்

மூளாய், ஏப்ரல் 25

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு புதிய தளபாடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான முயற்சியில்வலி. மேற்கு பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது. சுழிபுரம்மேற்குப்பகுதியில் செயற்படும் பாரதி கலை மன்றத்தின் அறநெறிப்பாடசாலை மற்றும் அராலி வடக்குப் பகுதியில் செயற்பட்டுவரும் கலைவாணி அறநெறிப் பாடசாலைஆகியவற்றுக்கே தளபாடங்கள் வழங்கப்பட உள்ளன. ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா பத்தாயிரம் ரூபாபெறுமதியான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நிதி ஒதுக்கீடு ஏற்கனவே செய்யப்பட்டு, வேண்டிய தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் குறிப்பிட்ட பாட[illegible] இவை கையளிக்கப்படவுள்ளன. (ஐ-க-99)

## செய்திச் சாரம்

### அன்பளிப்பு

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கு புதிய ஜெனரேற்றர் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இந்த ஜெனரேற்றரை நாகர் கோவிலைச் சேர்ந்த செல்வராசா என்பவர் அன்பளிப்புச் செய்துள்ளார். (க-171)

### தொலைபேசி இணைப்பு

கைதடி ஏப்ரல் 26

தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது (க-74)

### பிரதேச செயலகத்துக்கு 'பக்ஸ்' வசதி

பளை பிரதேச செயலகத்திற்கு 'பக்ஸ்' இயந்திரமும், மின்சாரம் வழங்குவதற்கான ஜெனரேற்றரும் கிடைத்துள்ளன.

கிளிநொச்சி அரச அதிபரினால் பக்ஸ் இயந்திரம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், பிரதேச செயலக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஜெனரேற்றர் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### மருந்தகத்தில் சிகிச்சை

சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகம் முற்பகல் நேரத்தில் திறக்கப்பட்டு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரி பிற்பகலில் கோப்பாய் அரசினர் வைத்தியசாலக்குச் சென்று கடமையாற்றி வருவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது (ஐ-135)

### 'கெயர்' நிறுவனம் உதவி

வடமராட்சி, ஏப்ரல் 26

குடத்தனை, அம்பன் பகுதி விவசாயிகளுக்கு மரக்கறி, தானிய வகைகளைப் பயிரிட 'கெயர்' நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த உதவித்திட்டத்தின்கீழ் இப்பகுதியைச் சேர்ந்த 30 விவசாயிகளுக்கு மரக்கறி விதைகளும், தானிய விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-173)

### 'கெல்ற்' வகுப்புகள்

1998 99 கல்வியாண்டில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 'கெல்ற்' ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

மாவட்ட மட்டத்தில் 5 நிலையங்களில் மேற்படி ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது. (ஐ-185)

### சேவைநலன் பாராட்டு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சுமார் ஏழு ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றிய கா. சந்திரபாலனின் சேவையைப் பாராட்டும் வைபவம் எதிர்வரும் மே 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-99)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கடைப் பகுதியில்

## காணி விற்பனைக்கு

ஐந்து கடைகள் கட்டக்கூடிய விசாலமான வெற்றுக் காணி 5½ பரப்பு அனுமதிக்கப்பட்ட வரைபடத்துடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க.

ஞாயிற்றுக் கிழமைகளில் வசதியாக இருக்கும்.

கந்தசாமி தங்கையா
43, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை.

(65168)


## செல்வா நினைவு ஆராதனை

கொழும்பில், வெள்ளவத்தை பிரான்சிஸ் வீதியில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபைத் தேவாலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் விசேட ஆராதனையில் தந்தை செல்வாவின் வாழ்வுக்கும் அவரது பணிகளுக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தப்படும்.

(ஐ-ரீ)

மாவட்ட மட்டத்தில்

## பெண் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் பெண் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறியினை மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித்திணைக்களம்நடத்தவுள்ளது.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் மேற்படி பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

இதேவேளை —

கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறியும் மேற்படி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

(ஐ-5)

வட அல்வை ஸ்ரீலங்கா வித்தியாசாலை

அமரர்

## பாலசண்முகம் ஜெயபாலன்

அரங்குப் புனரமைப்பு விழாவும்
இருபத்திநான்காம் ஆண்டு நினைவஞ்சலியும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 26 |
| — | — |
| 04 | 04 |
| — | — |
| 1955 | 1975 |

ஏழை எளியவர் வாழ்வின்
மேம்பாட்டுக்காக உயரிய இலட்சியத்தைத்
தன்னகத்தே கொண்டு வாழ்ந்த ஜெயபாலன்
அகால மரணமானாயினும், அவன் நினைவு
எம்மத்தியில் நிலைத்திட
இவ்வரங்கம் என்றென்றும் சான்றாகும்.

குடும்பத்தினர்.

அரசடி விநாயகர் வீதி,
வட அல்வை.

(65160)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

''மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் 50 மாணவிகளுக்கான விடுதி அமைத்தல்''

கட்டட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 7 (M7) அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உள்ள சிறீலங்கா தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சபையில் (NCCASL) அங்கத்தவராகவுள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரம் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 14-05-99 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப்புத் தொகை— ரூபா 1,000
மீளளிக்கப்படக்கூடிய வைப்புத் தொகை— ரூபா 25,000

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 01-06-99 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவையேற்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்வி தாரர்கள் பரிசீலிக்க முடியும்.

கலாநிதி
க. குணராசா
பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
தபால் பெட்டி இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[ C/7304 ]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 06 |
| — | — |
| 05 | 05 |
| — | — |
| 1928 | 1998 |

அமரர்

## சுப்பையா சிவராசன்

திதி: 26 - 04 - 99

பொன்றாத புகழ்பூத்த சுப்பையா சிவராசன்
குன்றேத்து தீபமாய்க் கொக்குவிற்பதிவாழ்ந்து
மன்றாடு மாத்தனையான் மலர்பாதம் அடைந்திட்ட
குன்றேத்து உணர்வுடைய ஓராண்டு கழிந்தின்றே.

குடும்பத்தினர்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(65141)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

(பிரபல இந்திய - இலங்கை வர்த்தகர்)

| அன்னை மடியில் | பரமன் திருவடியில் |
|---|---|
| 01 - 08 - 1938 | 13 - 03 - 1999 |

பாசமுடன் வளர்த்த பண்புமிகு அப்பாவே!
புண்ணியங்கள் பல செய்து புகழோங்க வைத்தீர்கள்
காலனுக்கும் பொறுக்கவில்லை கணப்பொழுதில்
எமைப்பிரித்து கண்கலங்க வைத்தானே
ஆறாத்துயர்தனில் ஆழ்ந்துவிட்டோம் அப்பாவே!
குருநாதர் பதம் சேர அனுதினமும் வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்

''சிவகிரி''
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

[சி/7302]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 27 |
| — | — |
| 02 | 03 |
| — | — |
| 1940 | 1999 |

அமரர்

## நடராசா தங்கராசா

(செயற்பாட்டு முகாமையாளர், கிழக்கு வலயம்
இலங்கை வங்கி, கொழும்பு)

அன்பின் திருவுருவாய்
எம்முடன் கலந்திருந்து
அணையாத ஒளி விள காய் ஒளி வீசி
பாசத்தின் பிற பிடமாய் மலர்ந்திருந்து
பண்பின் உயர்விடமாய் வாழ்ந்திருந்து
இறைவனடி எய்திய எங்கள் அன்புத்தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும் அனுதாபச் செய்தி அனுப்பியும் பல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

17/10, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(65150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தந்தை நிழலில்...!

தந்தை செல்வா அமரத்துவம் அடைந்து இன்றுடன் இருபத்திரண்டு ஆண்டுகளாகின்றன. யாழ்ப்பாணம் நகரத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் இன்று அவரது சிலை திறக்கப்படுகிறது. ஈழத் தமிழர்களின் அரசியலில் — அவர்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் — தலைமகனாக விளங்கிய தந்தையின் நினைவை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்ல நினைவூட்ட இந்த முயற்சி உதவும்.

தமிழர்கள் தங்கள் பாரம்பரிய தாயகத்தில், தமக்கெனத் தன்னாட்சி நிறுவி, தம்மைத் தாமே ஆள வேண்டும் என்ற தந்தை செல்வாவின் இலட்சியம் இன்னும்எய்தப்படவில்லை- ஆனால் அந்த இலக்கை அடைவதற்காகவே மக்கள் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்; உயிர், உடைமைத் தியாகங்களைச் செய்து வருகிறார்கள்; அகதிகளாகி அவலப்படுகிறார்கள்.

தந்தைசெல்வா காலத்திலிருந்தே தமிழர்களின் உரிமைப்போரை இராணுவ பலம்கொண்டு ஒடுக்குவதற்குச் சிங்களத் தலைவர்கள் முனைந்தார்கள். அதனைக் கால் நூற்றாண்டாகத் தொடர்கிறார்கள். எனினும் அந்த வழிமுறையைக் கைவிடவேண்டும் என உணர்ந்ததாக இல்லை.

தமிழர்களின் உரிமைகளைப் பெறும் பொருட்டுத் தந்தைசெல்வா சமாதான வழியில் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. அந்த நிலை மேலும் தீவிரமடைந்து சமாதானப் பேச்சு நடத்தும் நினைப்பையே இன்றைய தென்னிலங்கைத் தலைவர்கள் இழந்துள்ளனர். குறிப்பாக அரசாங்கம் சமாதானம் என்ற பெயரில் போரை நடத்துவதிலேயே மிக முனைப்பாக உள்ளது.

உரிமைக்காக இறுதி வரை போராடுவது என்று தந்தை செல்வா ஊட்டிய ஆத்மபலம் தமிழர்களிடம் சந்ததி சந்ததியாக ஊறிவிட்டது. இதனைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் புரிந்து கொண்டிருப்பின் இவ்வாறு நாட்டையும் தமது இளைஞர்களையும் அவமே அழித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையால் ஒடுக்கிவிட முடியாது என்பதனையும், அரை குறைத் தீர்வுகளைத் திணிக்க அவர்கள் ஒப்பமாட்டார்கள் என்பதனையும் தென்னிலங்கைக்கு பலத்த குரலில் கூறவேண்டும். அதற்குத் தேவை கட்டவிழாத ஒற்றுமையும் பற்றுறுதியும் சுயநலமின்மையும் சந்தர்ப்பவாதமின்மையுமே.

தந்தை செல்வாவை நினைவுகூரும் இந்நாளில், உரிமைகளைப் பெறும் பொருட்டு மனத்தூய்மையுடனும் நேர்மையுடனும் ஒற்றுமைப்பட்டுச் செயற்படுவோம் என்று ஒவ்வொரு தமிழ் மகனும், இன்றைய சந்ததி அரசியல் தலைவர்களும் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே தனயர்களாகிய நாம் தந்தையின் ஆத்ம நிழலில் நிற்கத் தகுதி உடையவர்களாவோம்.

# செல்வா செய்த ஒப்பந்தங்கள் மூலம் தமிழரின் தாயகத்துக்கு அங்கீகாரம்

## தமிழரசை உருவாக்க முனைந்தவர் அவர்

சிலாபம், நீர் கொழும்புத் தமிழர்களுக்கு நேர்ந்த கதி வடக்கு—கிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்படாது காக்கும் பொருட்டு அவர்களது மொழியையும் மற்றும் மதம், பண்பாட்டையும் அவர்களது தனித்துவத்தையும் பேணிப் பாதுகாப்பதற்காகவே—

தந்தை செல்வா தமது நாடாளுமன்ற சகாக்களான கு. வன்னியசிங்கம் மற்றும் செனேட்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோருடன் இணைந்து ஒரு தமிழரசை ஸ்தாபிப்பதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949 ஆம் ஆண்டில் ஒரு



தேசிய விடுதலை இயக்கமாக உருவாக்கி இருந்தார்.

இத் தீவில் ஒரு தமிழரசை உருவாக்க முனைவதால், இயக்கத்தைத் தேசத் துரோக குற்றச்சாட்டுக்கு இலக்காகாது காத்துக் கொள்ளும் பொருட்டே தாம் உருவாக்க விரும்பிய தமிழரசை ஒரு சமஷ்டிக் கூட்டாட்சியின் ஓர் அங்கமாகவும் பெற்றுக்கொள்வதற்கும் தந்தை செல்வா சித்தமாக இருந்தார். அல்லாவிடில் அவரது தமிழரசுப் பயிர் முளையிலேயே அழிக்கப்பட்டிருக்கும். இந்தியஉப கண்டத்தில் பிரிவினைத் தடைச் சட்டத்தால் திராவிட இயக்கங்களுக்கு நேர்ந்த கதி இதற்குப் பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கட்சியாகவும் அறியப்பட்டது. தமது குறிக்கோளை எய்தும் முதற்படியாகத் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் சென்ற தந்தை செல்வா, தமிழர் தாயகத்துக்கும் அதன் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும் மாண்புக்கும் முறையான அங்கீகாரத்தைப் (ஆவணப்படுத்தப்பட்ட இரு இடைக்கால உடன்படிக்கைகளாலும், இரு கனவான் ஒப்பந்தங்களாலும்) பெற்றுத் தந்திருந்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் 1957 ஜூலை 26 ஆம் திகதி நள்ளிரவில் பிராந்திய சபைகளுக்காகச் செய்து கொள்ளப்பட்ட பண்டா — செல்வா உடன்படிக்கையே ஆவணமயப்படுத்தப்பட்ட வரலாற்று ரீதியான முதல் ஒப்பந்தமாகும்.

### சீ. பீ. டி. சில்வாவுடன் கனவான் ஒப்பந்தம்

பண்டாரநாயக்காவின் அகால மறைவிற்குப் பின்னர் ஓரே ஆண்டில் 1960 மார்ச் திங்களில் நிகழ்ந்த முதற் தேர்தலில் எந்தக் கட்சியும் நாடாளுமன்றப் பெரும்பான்மை பெறவில்லை தொங்கு நாடாளுமன்றத்தில், நாடாளுமன்றப் பெரும்பான்மையை எண்பிப்பதற்காக அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த சீ. பீ. டி. சில்வா, தமது கட்சி அரசு அமைப்பதற்குத் தமிழரசுக் கட்சி உதவுமாகவிருந்தால், ஒரு தலைப்பட்சமாக பண்டாரநாயக்கா உடைத்துக் கொண்ட பண்டா— செல்வா உடன்படிக்கையைத் தமது அரசு நடைமுறைப்படுத்தும் என்று தந்தை செல்வாவுடன் பொருந்திக் கொண்டார்.

மேற்படி கனவான் உடன்படிக்கையின் நிமித்தம் சீ. பீ. டி. சில்வாவின் அரசைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத்தின் முழுப் பதவிக்காலமாகிய ஐந்து வருடமும் ஆதரிக்கும் என்று அப்போதைய மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்காவிடம் உறுதியளித்திருந்தார். இருந்தும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அதே ஆண்டில் 1960 ஜூலை மாதத்தில் இரண்டாவது தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வெற்றியை உறுதி செய்வதற்கு திருமதி சிறிமாவோ அதன் தலைமையை ஏற்க வேண்டும். என ஆலோசனை கூறியிருந்தவர் அவரது குடும்ப நண்பராகிய

**த. இன்பரசு**

டாக்டர் நாகநாதனே. அச் சந்தர்ப்பத்தில் சுதந்திரக் கட்சியின் தலைமையை அவர் ஏற்றிருக்காவிடில் சேனநாயக்கா பெயர் அரசியலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டது போன்றே பண்டாரநாயக்காவின் பெயரும் கால ஓட்டத்தில் அருகியிருக்கும்.

சுதந்திரக்கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரும் சீ. பீ. டி. சில்வா கொடுத்த அதே வாக்குறுதியைத் தந்தை செல்வாவிடம் தந்திருந்தார். தமிழரசுக் கட்சியின் ஆதரவு பெற்றுத் தேர்தலில் வென்றபின் தமது உறுதிமொழியைக் காற்றில் பறக்கவிட்டார். 1961 சத்தியாக்கிரகத்துக்கு அதுவே காரணமாயிற்று.

### போராளியாகவே இறந்தார் எஸ் ஜே. வி.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மூவர், அதாவது எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா, சிறிமாவோ அம்மையார், சீ. பீ. டி. சில்வா ஆகியோர்—தமிழர் தாயகத்தையும், அதன் ஆள்புல ஒருமைப்பாட்டையும் மாண்பையும் அங்கீகரித்த வரலாறு இதுவே. தமிழர் தாயக ஆள்புல ஒருமைப் பாட்டையும் அதன் மாண்பையும் பங்கமுறாது பேணிப் பாதுகாத்துக் கொண்டே தமிழ் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை முன்னேற்றுவதற்குத் தமது வாழ்வின் இறுதிவரை போர்க்கோலம் குலையாத ஒரு போராளியாகத் தந்தை செல்வா போராடி வந்தார்.

அன்னாரது 22 ஆவது அமரத்துவ தினத்தைத் தமிழ் மக்கள் நன்றியறிதலுடன் அனுட்டிக்கும் இந்நாளில்— தந்தை செல்வா பிரதிநிதித்துவப்படுத்திய காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து துடம்பெயர்ந்த மக்கள் இளக் குடியேறுவதற்குப் மீதுகாப்புக் காரணங்களைக் காரணமாகச் சொல்லி அனுமதி மறுக்கப்பட்டிருப்பது குறித்துக் கவனத்தில் எடுக்க வேண்டும். தமிழர் தாயகத்தின் ஆள்புல ஒருமைப்பாட்டையும, அதன் மாண்பையும் பேணிப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தமிழரும் இத்தினத்தில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தந்தையின் நினைவு தினங்கள் அனுட்டிக்கப்படுவதும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொன்விழா இவ்வாண்டு கொண்டாடப்படுவதும் அதற்கு உதவ வேண்டும். தமிழர் தாயக ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வெறும் வாக்குறுதிகள் போதாது. அவை உடன் நடைமுறைப்படுத்தப்படுவதைச் சம்பந்தப்பட்டவர்கள் துரிதப்படுத்த வேண்டும். ★

# செல்வாவுக்கு தெல்லிப்பழையில் நினைவஞ்சலி நிகழ்வு எப்போது?

தந்தை செல்வாவின் 22 ஆவது அமரத்துவதினம் இன்று திங்கட்கிழமை (26 – 4 – 99) யாழ். நகரில் தந்தை செல்வா நினைவாலயத்திலும். தலைநகர் கொழும்பில் தென் இந்தியத் திருச்சபையின் வெள்ளவத்தை தேவாலயத்திலும் அனுட்டிக்கப்படுகிறது.

தந்தை செல்வா நினைவாலயத்தில் இன்று நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளுள் அங்கு அவருக்கு சிலை நிறுவப்படுவது பிரதான நிகழ்ச்சியாக அமையும்.

தந்தை செல்வா நினைவாலயத்தில் அவரது அஸ்தியின் ஒரு பகுதி நல்லடக்கம் செய்யப்பட்டு இருந்தது தெரிந்ததே. அது போன்றே அவர் பிரதிநிதித்துவம் செய்த காங்கேசன்துறையில் அவரது சொந்தக் கிராமமான தெல்லிப்பழையில் அவரது குடும்ப மயானத்தில் அஸ்தியின் ஒரு பகுதி நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தது.

**த. சா. ஆனந்தராசா**

தந்தையின் நினைவு தினங்களின் மலர் அஞ்சலி செய்வதற்குத்தானும் அவ்விடத்தை அணுக முடியாதபடி அது உச்சப்பாதுகாப்பு வலயத்துக்குள் அடக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் அவர் வழிபாடு செய்து வந்த தேவாலயமும் போரில் அழிவுற்று இருப்பதுடன் பொதுமக்கள் அணுக முடியாதவாறு மேற்படி தேவாலயப் பகுதியும் உச்சப் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது; அதனால் மேற்படி சபையார் தமது வழிபாடுகளை மருதனார் மடம் மகளிர் மத்திய நிலையத்திலே தற்காலிகமாக நடத்தி வருகின்றனர். வசதி கருதி தந்தையின் நினைவு தின ஆராதனைகளை உடுவில் தேவாலயத்தில் நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தனர்.

வலிகாமம் வடக்கு மக்கள் மீளக்குடியேற பாதுகாப்புப் படையினர் விதித்திருக்கும் தடையே தந்தை செல்வாவின் சொந்தக் கிராமமாகிய தெல்லிப்பழையில் இவை நடைபெறவியலாது இருப்பதற்குக் காரணம். வலி. வடக்கு பிரதேசசபை அடுத்த ஆண்டிலாவது இந் நிகழ்வுகள் தெல்லிப்பழையில் நடைபெறவழிவகுக்கும் வண்ணம், இடம்பெயர்ந்த மக்களை வலிகாமம் வடக்கில் குடியமர்வதற்கு நடவடிக்கை எடுக்குமா?

தந்தை செல்வாவின் அஸ்தியில் மூன்றாவது பாகம் திருகோணாமலையில் நல்லடக்கம் செய்யும் பொருட்டு அவரது மைந்தன் சந்திரகாசனால் அங்கு எடுத்துச்செல்லப்பட்டது. ஆயினும், அங்கு ஏற்பட்ட கலவரங்களின் நிமித்தம் அது கைகூடவில்லை. ஆகவே, தந்தையின் அஸ்தி அங்குள்ள ஒரு தேவாலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது.

இவ்வாண்டு தந்தைசெல்வா ஸ்தாபித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பொன் விழா ஆண்டாகும். மேற்படி பொன் விழாக் கொண்டாட்டங்களின் அம்சமாக தந்தையின் அஸ்தியை வைபவ முறைப்படி திருகோணமலையில் நல்லடக்கம் செய்யச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ★

## நாளை

சித்திரை 14
செவ்வாய்க்கிழமை
திதி: துவாதசி
பிற்பகல் 4.01 வரை:
நட்சத்திரம்: உத்தரம்
முன்னிரவு 10.13 வரை.
பிரதோச விரதம்
சுபநேரம்: 10.28-11.58
ராகுகாலம்: 2.59-4.29
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் முதலில் உங்கள் தேவைகள் மேலும் மேலும் முன்னேறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

[illegible]

## பரீட்சைப் பெறுபேறு

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 26

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கணக்கியலும் நிதியியலும் இறுதி ஆண்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக வணிகக் கல்வி பீடாதிபதியும், பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளருமான இ. நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையில் 75 மாணவர்கள் மூன்றாவது அணியில் சித்தியடைந்துள்ளனர்.

(ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக வங்கி ஓய்வூதியருக்கும்

# வைத்திய உதவு தொகை வழங்குக

## சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஓய்வூதியர்கள் அனுபவிப்பதுபோன்று இலங்கை வர்த்தக வங்கி ஓய்வூதியர்களுக்கும் வைத்திய உதவித் தொகையினை வழங்க வேண்டும். இவ்வாறு வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் இலங்கை வர்த்தக வங்கி நிர்வாகத்தைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் கிங்ஸ்லி ராஜநாயகம் இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம், இலங்கை வங்கி ஊழியர் சங்கப் பொருளாளர் சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் பணியாளர்களது சம்பளம் மாற்றியமைக்கப்படும் அதே வேளை ஓய்வூதியமும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென இலங்கை வர்த்தக வங்கி நிர்வாகத்தைக் கோருவது.

★ விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களையும் இத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வர்த்தக வங்கி நிர்வாகத்தைக் கோருவது.

கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் கிங்ஸ்லி ராஜநாயகம் தெரிவித்ததாவது:

வங்கிகளில் எமது ஒவ்வொரு உரிமைகளையும் சலுகைகளையும் நாம் போராடியே வென்றெடுத்துள்ளோம் அதே போன்று வங்கி ஓய்வூதியர்களும் தமது சலுகைகளைப் பெறுவதற்கு தொடர்ந்து போராடவேண்டும். ஓய்வூதியர் சங்கம் இந்தப் போராட்டத்தைத் தனித்து நின்று நடத்தாமல் வங்கி ஊழியர் சங்கங்கள் அனைத்துடனும் ஒன்றிணைந்து தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் அது நிர்வாகத்திடம் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும்— என்று தெரிவித்தார்.

(ஐ-6)

### தீவுப்பகுதியில் உள்ள

## பிரதேச சபைகளுக்கு மினிபஸ்கள் கிடைக்கும்

தீவுப்பகுதி பிரதேச சபைகளுக்கு ஐந்து மினிபஸ் வண்டிகளை வழங்கவும், நெடுந்தீவு பிரதேச சபைக்கு மேலதிகமாக மோட்டார் படகு ஒன்றை வழங்கவும் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம். பௌசி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதி பிரதேசசபைகளுக்கு மினிபஸ் வண்டிகளை வழங்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டு பேச்சுகள் நடத்தியதைத் தொடர்ந்து அமைச்சர் பௌசி மினிபஸ் வண்டிகளையும் நெடுந்தீவுக்கு மேலதிகமாக படகு ஒன்றை வழங்கவும் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் —

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு இரண்டு மினிபஸ் வண்டிகளும் காரைநகருக்கு ஒன்றும்நெடுந்தீவு வேலணை, பிரதேச சபைகளுக்கு தலா ஒவ்வொன்றுமாக ஐந்து மினிபஸ் வண்டிகளும் நெடுந்தீவுக்கு மேலதிகமாக படகு ஒன்றும் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-111)

## சோமஸ்கந்தா கல்லூரிக்கு புதிய வகுப்பறை கட்டடம்

வலி. கிழக்கு, ஏப்ரல்26

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கு மாணவர்களின் இடவசதியைக் கருத்திற்கொண்டு அந்தப் பாடசாலை தர்மகர்த்தா சபை 10 லட்சம்ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை அமைத்து கொடுத்துள்ளது.

100 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி வகுப்பறை வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

விரைவில் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பாடசாலைக்கென தர்மகர்த்தா சபை மூலம் கூடிய நிதி உதவியை உள்ளூரில் இருந்து பெற்று வளர்ச்சி பெற்றுவரும் பாடசாலை புத்தூர் சோமஸ்கந்தா என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-180-ரி)

## தும்புத் தொழிற்சாலை விசமிகளால் தீக்கிரை

தென்மராட்சி, ஏப்ரல் 26

தும்பு இல்லாததால் மூடப்பட்டிருந்த தொழிற்சாலை இனம் தெரியாதோர் தீயிட்டதால் முற்றாக எரிந்து சாம்பலானது.

தொழிற்சாலைக் கொட்டிலுக்குள் இருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தும்புத் தொழில் இயந்திரங்களும் எரிந்து நாசமாகின. கொட்டிலுக்குத் தீயிட்டோர் அதற்கு அருகில் காணப்பட்ட முப்பதுக்கு மேற்பட்ட வாழை மரங்களையும் வெட்டிக் கொட்டிலுக்குள் போட்டு எரித்துள்ளனர்.

மீசாலை வங்களா வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தும்புத் தொழிற்சாலையே எரிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


# O L DAY CLASS

★ யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழுவின் போதனைகள்

★ வார நாள்களில் காலை 8-30 — 1-30 வரை

★ சனி, ஞாயிறு நாள்களில் விஷேட கணித வகுப்புகள்

★ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலறந்த கட்டமைப்பு

★ அச்சடித்த பாடக்குறிப்புகள், வினாக்களின் உதவியுடன் 7 மாத கால துரிதமீட்டல்

மே 05இல் ஆரம்பம்

பெயர்களைப் பதிந்து உங்கள். இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

ESTD:-1973 REGD:-No J/7993

The Express Institute - அதிபர்

IRUPALAI - KOPAY.

(65...)


## இப்படியும் நடந்தது

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் பொதுமகன் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம்கைகலப்பில் முடிந்த சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை அச்சுவேலியில் இடம்பெற்றது.

கைகலப்பைத் தொடர்ந்து இருவரும் வீதியில் உருண்டு புரண்டு சில நிமிடங்கள் வரை சண்டையில் ஈடுபட்டனர். மேற்படி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து வந்த அச்சுவேலி பொலீஸார் சக பொலீஸாரை சம்பவ இடத்திதிலிருந்து மீட்டுச் சென்றனர்

கைகலப்பில் ஈடுபட்ட இருவரும் போதையில் இருந்ததாகக் கூறப்பட்டது.

(இ-180)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

வலி. தெற்கு, ஏப்ரல் 26

அரசாங்க பாடசாலைகள் யாவும் முதலாம் தவணை விடுமுறை முடிவடைந்து இரண்டாம் தவணைக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. (ஐ-...)


## தட்டெழுத்தாளர் தேவை

தமிழ் ஆங்கிலத் தட்டெழுத்தாளர் தேவை.
விவரங்கள் நேரில்:

(S) றோணியோ நிறுவனம்
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

(65176)

## தர்ம்சன்ஸ் தொலைத் தொடர்பு நிலையம்
### அரியாலை

இன்று முதல் [26 = 04 - 1999] உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்

★ இரவு பகல் சேவை

★ தனிமையாக கதைப்பதற்கேற்ற வசதி

26 - 04 - 1999 — 27 - 04 - 1999 (Incoming) வரும் அழைப்புகளிற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

T.P No உள்ளூர்:- 021 — 2790
வெளியூர்:- 0094 — 21 — 2790

THARRMSONS
2or4, கனகரட்ணம் றோட்,
அரியாலை.

[65178]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் நல்லம்மா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 226, பிறவுண் வீதியில் வசித்தவருமாகிய திருமதி பொன்னம்பலம் நல்லம்மா 25 - 04 - 1999 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், பத்மாவதி (கொழும்பு), கனகலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சகுந்தலாதேவி, பாலசிங்கம் (ஆறுமுகம் கூல்பார்), சத்தியசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நெல்லநாதன் (கொழும்பு). கனகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற தெய்வேந்திரன் (கூட்டுறவுப் பரிசோதகர்), இந்திராகாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சரஸ்வதி, நமசிவாயம், முருகேசு (கடற்றொழில் பரிசோதகர் - யாழ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-04-99) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பாலசிங்கம்
(மகன்)

226, பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(65177)

### திருமதி யோகேஸ்வரி காசிப்பிள்ளை

[ வேலணை ]

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி காசிப்பிள்ளை அவர்கள் [ 24—04—99 ] சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலணை காசிப்பிள்ளைப் பத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி ஏகாம்பரம் சரஸ்வதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி புண்ணியமூர்த்தி சிவகாமிப்பிள்ளையின் அன்பு மருமகளும், நளாயினி (ஜேர்மனி), தயாநிதி, கேதாரநாதன், கலாநிதி, கலைச்செல்வி, பாலினி (ஜீவா), சுகிலநாதன், சுபாசன் ஆகியோரின் அன்புத்தாயாரும். பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), தவராஜா, வின்சன், விசயன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாலகெங்காதரன், பிரபாகரன், நாகபூசணி, கருணாகரன், சிவபாலன், சின்னமணி. பேரின்பநாயகி. காலஞ்சென்ற விசுவமூர்த்தி. பேரானந்தம். ரமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும். சுகந்தி, துசியந்தி, சசிகுமார். தமயந்தியின் பெரியதாயாரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற பூரணம், காலஞ்சென்றகந்தசாமி. இலட்சுமிப்பிள்ளை, முருகையா, சண்முகராசா. பாலசிங்கம், நாகரெட்ணம் (குண்டுமணி) ஆகியோரின் மைத்துனியும், கபூரன் (ஜேர்மனி), நிமேஸ், ருசானி, சாருகேசன், பிரதீஸ், தபுதெபோரா, காலஞ்சென்ற தாட்சாயினி, ஜெனிபா, சாம்பவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [26-04-99] திங்கட்கிழமை மாலை 2 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
காசிப்பிள்ளை
[ கணவர் ]

406. கே.கே.எஸ் வீதி,
சிவலிங்கப்புளியடி.
யாழ்ப்பாணம்.

[ 65174 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு, எரிபொருள்கள் மலையகத்தில் தட்டுப்பாடு!

## ரயில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

கொழும்பு, ஏப்ரல் 26
மலையகத்துக்கான ரயில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளதால் அங்கு உணவு மற்றும் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக மலையகத்துக்கான ரயில் போக்குவரத்துக்கள் கடந்த ஒரு வார காலமாகத் தடைப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள ரயில் பாதைகளைத் திருத்தும் பணிகள் முழுமூச்சாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க வாகனங்கள் மூலம் அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஊர்காவற்றுறையிலிருந்து மாலை நேர பஸ் சேவை

## பயணிகள் கோரிக்கை

நெடுந்தீவு, ஏப்ரல் 26
ஊர்காவற்றுறையில் இருந்து பி.ப 4.15 மணிக்குப் பின்னர் யாழ். நகருக்குச் செல்வதற்கு பஸ் சேவைகள் எதுவும் இல்லாததால் நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதிகளில் இருந்து குமுதினி படகு மூலம் ஊர்காவற்றுறைக்கு வரும் பயணிகள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் இருந்து பி.ப. 1.30 மணிக்குப் புறப்படும் குமுதினி மோட்டார் படகு குறிகாட்டுவான், நயினாதீவு துறைமுகங்களில் நிறுத்தப்பட்டு ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கு பி.ப. 4.30 மணிக்கு வந்து சேருகின்றது.

ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் பஸ் 4.15 மணிக்கு தனது சேவையை ஆரம்பிப்பதால் குமுதினி படகில் வரும் பயணிகள் மேற்படி பஸ்ஸைப் பிடிக்க முடியாதிருக்கின்றனர்.

பஸ் கிடைக்காத நிலையில் பயணிகள் இரவு நேரங்களில் ஊர்காவற்றுறையில் தங்குவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் —

பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு வடபிரதேச போக்குவரத்துச் சபை குமுதினி படகு ஊர்காவற்றுறைக்கு வந்து சேர்ந்ததும் இல.777 வடக்கு வீதி ஊடாக அங்கிருந்து யாழ். நகருக்கு செல்லக்கூடியதாக ஒரு பஸ் சேவையை நடத்த வேண்டும் எனவும் —

பயணிகள் தெரிவிக்கிறார்கள். (ஐ - 111)

# வலி. மேற்கில் கலாசார மண்டபம் அமைக்க ஏற்பாடு

மூளாய், ஏப்ரல் 26
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் புதிய கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதனை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்வதற்கு யாழ். செயலகம் முன்வந்துள்ளது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இக்கலாசார மண்டபத்தினை நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கானையில் உள்ளடச்சுக் கோட்டைக்கு முன்பாகவுள்ள அரச காணியில் இப்புதிய கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது. ஏற்கனவே இப்பகுதியில் திறந்தவெளி அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் இக்கட்டடம் பூரணமானதாக அமையவில்லை. இதை அடிப்படையாகக் கொண்டு புதிய கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

நவீன அரங்கியல் அம்சங்களுக்கு ஏற்பவும், கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கேற்ற வகையிலும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக இக்கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் மேற்குப் பிரதேச செயலரும், கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய கா. சந்திரராசா மேற்கொண்டு வருகிறார். (ஐ-99-185)

# பல்கலை. ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 26
பல்கலைக்கழக ஊழியர்களுக்கென ஓய்வூதியத் திட்டம் ஒன்று இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனப்பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

சேமலாபநிதியின்ஒரு பகுதியைப் பயன்படுத்தி மேற்படி ஓய்வூதியத்திட்டத்தை வகுப்பதற்கு ஆலோசனை நிறுவனம் ஒன்றின் உதவியைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பெற்றுள்ளது எனவும்—

இந்த ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொள்ளும் ஊழியர்கள் ஆயுட்கால ஓய்வூதியம், விதவைகளுக்கு 50 சதவீத ஓய்வூதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், நன்கொடை, வழமையான சேமலாபநிதியில் மூன்றில் இரண்டு பங்கு ஆகியவற்றைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர் எனவும்—

கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை—

இந்த சேமநல உதவிகள் வழங்கப்படும் நிலையில் போதனை சாரா ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வார்களானால் அதில் எந்த விதமான நியாயமும் இல்லை எனவும்—

ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபடுவதாகத் தீர்மானிப்பார்களானால் இந்தச் சலுகைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டு ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்படுவது இடை நிறுத்தி வைக்கப்படும் என்றும்—

கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# மயானத்தைத் துப்புரவு செய்யக் கோரிக்கை

வட்டுக்கோட்டை, ஏப்ரல் 26
இளவாலை முன்னானைப் பகுதிகளில் மக்கள் பாவிக்கும் மயானம் துப்புரவு செய்யப்படாமல் முட்களும், புதர்களும் வளர்ந்து காணப்படுகின்றது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து பல வருடங்களாகியும் மயானத்தைத் திருத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்குக் கொண்டு செல்ல முடியாதிருப்பதால் இந்த மயானத்தையும் அதற்குச் செல்லும் வீதியையும் திருத்திப் பொது மக்களின் பாவனைக்குத் தந்து உதவுமாறு வலி தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரையும் வலி. தென்மேற்கு பிரதேச செயலரையும் பொதுமக்கள் கோரியுள்ளார்கள். (ஐ-12)

# அரை இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரை இறுதி ஆட்டங்கள் இன்று காலை முதல் யாழ். கல்வி வலய அலுவலக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயது — மல்லாகம் ம. வி. எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ 19 வயது — மல்லாகம் ம. வி. எதிர் யாழ். சென்றல்.

இந்த ஆட்டங்கள் காலை 8 மணி முதல் நடைபெறும்.

★ 17 வயது — ஆவரங்கால் மகாஜனா எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தி.

★ 19 வயது — புத்தூர் சோமஸ்கந்தா எதிர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தா வித்தியாலயம். (இ-3)

இந்த ஆட்டங்கள் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்.

# வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ 15 வயது — சண்டிலிப்பாய் இந்து எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி, வேம்படி எதிர் டிறிபேக்.

★ 17 வயது — சண்டிலிப்பாய இந்து எதிர் டிறிபேக்; யூனியன் எதிர் சாவகச்சேரி இந்து.

★ 19 வயது — சண்டிலிப்பாய் இந்து எதிர் சாவகச்சேரி மகளிர், சுண்டுக்குழி மகளிர் எதிர் டிறிபேக். (இ-3)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, ஏப்ரல் 26
சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள ஆலய மகோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை பி. ப. 2.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் பி.ப.4.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (ஐ 117)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 26
கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு 108 கலச சங்காபிஷேகம், விசேட பூசை என்பன ஆலயப் பிரதம குரு சிவ ஸ்ரீ தி. சங்கராசக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு பூசையை அடுத்து சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார் (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 26
சுதுமலை அருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயிலின் நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-46 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இதற்கான கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 6.10 மணிக்கு ஆரம்பமாகும்.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி தொடர்கம் மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப் 26
அரியாலை அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு விசேட சங்காபிஷேகமும், விசேட பூசையும், பிற்பகல் 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து வைரவப் பெருமான் தெரு வீதி உலா வருதலும் இடம்பெறும் (இ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமான் ஆலயம். புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் ஏகாதசி விரதத்தையொட்டி இன்று விசேட அபிஷேக, பூசை, ஆராதனைகள் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராசராசேஸ்வரி(பேய்ச்சி அம்பாள் ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை முதல் இடம்பெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

## வாசகர் திருமுகம்

### வீதி திருத்ததுவதில் புறக்கணிப்பு ஏன்?

பலாலி வீதியையும் காங்கேசன் துறை வீதியையும் இணைக்கும் பிரதான வீதிகளில் கோண்டாவில்—வடக்கு கலைவாணி வீதியும் ஒன்றாகும். இவ்வீதி இந்திய அமைதிப்படை காலத்தில், அப் படையினராலும் பயன்படுத்தப்பட்டது கனரக வாகனங்களும் இ. போ. ச. வண்டிகள் உட்பட ஏனைய வாகனங்களும் இந்த வீதியாலேயே போக்குவரத்தில் ஈடுபட்டன. அப்போதே இவ்வீதி சிதைந்துபோய் இருந்தது.

அக்காலத்திற்குப் பின்னரே 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின்பின் இலங்கை இராணுவம் இவ் வீதியின் நடுவில் காப்பரண் அமைத்து யாழ்ப்பாணத்திற்கு வலிகாமம் மக்கள் வருவதற்கும் போவதற்கும் சோதனைச் சாவடியாகப் பயன்படுத்தியது.

இந்தியப் படைகள் காலத்திலேயே குண்டும் குழியுமாக இருந்த இவ்வீதி இலங்கை இராணுவம் பயன்படுத்திய கனரக வாகனங்களினால் மேலும் மேலும் அழிந்துபோய் உள்ளது.

இணுவில், கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய மேற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைத் திருநெல்வேலிச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கு இவ்வீதியையே பயன்படுத்துகிறார்கள். பொருள்களுடன் விழுந்து காயப்பட்டுச் செல்கிறார்கள். இலங்கைப் போக்குவரத்து ஊழியர்கள் அதிகாலையில் கடமைக்குச் செல்வதற்கும் இப்பாதையைப் பயன்படுத்துகிறார்கள் அவர்களும் குண்டு, குழிகளில் விழுந்தெழுந்து செல்கிறார்கள்.

பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மழை பெய்து விட்டாலோ, சறுக்கி விழவேண்டியுள்ளது வெள்ளை வெளேரென்ற சீருடையுடன் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் இவ்வீதியைத் (தடைமுகாம் இருந்த இடம்) தாண்டிச் செல்லும்போது சேறுபூசிய பாதணிகளுடனும் சீருடைகளுடனும் சென்று பயணம் செய்யும்போது மற்றப் பிள்ளைகளின் சீருடைகளையும் அசுத்தப்படுத்தும் நிலை ஏற்படுகிறது

இந்தவீதி காங்கேசன்துறைவீதியிலிருந்து, காரைக்கால் ரயில்வே வீதிவரை செப்பனிடப்பட்டுள்ளது அங்கிருந்து பலாலி வீதிவரை உள்ள பகுதியே மிக மோசமான நிலையில் சீரழிந்துள்ளது கோண்டாவில், இணுவில் பகுதிகளில் உள்ள ஒழுங்கைகள், வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. செப்பனிடப்படுகின்றன. இந்தவீதி மட்டும் செப்பனிடப்படாதது ஏன்? இந்த வீதி திருத்தப்படுவது எப்போது? பெருந்தெருக்கள் திணைக்களம் இதைக் கவனிக்காதா?

இனிமேலாவது எமது பிள்ளைகள் வெள்ளைப் பாதஅணிகளுடனும் சீருடைகளுடனும் பாடசாலை செல்ல வழி பிறக்குமா? விவசாயிகள் விழுந்தெழும்பாமல் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியுமா? பாதசாரிகள் வழுக்கி விழாமல் பயணம் செய்ய முடியும் நிலை வருமா? எப்போது?

பி விஜயரட்ணம்.
கோண்டாவில் வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்-புங்குடுதீவுபடகுசேவையை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கவேண்டும்

## மாணிக்கதாசன் ஆளுநரிடம் கோரிக்கை

வவுனியா, ஏப்ரல் 26

யாழ். மாவட்ட மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வுகாண மன்னார்—புங்குடு தீவு படகுச் சேவையை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்க வேண்டும்.

வவுனியாவில் இடம்பெற்ற இடம்பெயர் சேவையின் போது புளொட் அமைப்பின் உப—தலைவர் என்.மாணிக்க தாசன் மேற்கண்டவாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

அவர் சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:

★ வடக்கு-கிழக்கு ஆளுநர் சேவையை யாழ்ப்பாணத்திலும் நடத்த வேண்டும். குடாநாட்டில் உள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இது உதவும்.

★ காரைநகரில் படையினர் நிலைகொண்டுள்ள போது பொதுமக்கள் அங்கு வாழ்கிறார்கள். அதேபோன்று வலி—வடக்கிலும் மக்கள் குடியமர அனுமதிக்கப்படவேண்டும்

★ மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் காணாமற் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க வேண்டும். அவர்களில் தங்கியிருந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி, வங்கிக் கடன் ஆகியவற்றில் முன்னுரிமை வழங்கவேண்டும். (இ-3)

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சர்வதேச தினம்

## இன்று மௌன பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

ஏப்ரல் 26 ஆம் திகதியை ''போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சர்வதேச தினமாக ''சிறுவர் பாதுகாப்பு நிதியம் பிரகடனப்படுத்தியுள்ளது. இன்று திங்கட்கிழமை இத்தினம் இலங்கையிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது!

உலகளாவிய ரீதியில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அவலம் நீங்க வேண்டி இன்று காலை 9.30 மணிமுதல் ஒரு நிமிட நேரம் மௌனப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பொது மக்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தத் தினத்தை இலங்கையிலும் இன்று அனுஷ்டிக்குமாறு சிறுவர் உரிமைகளுக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா கேட்டுள்ளார்.

வடக்கு—கிழக்கில் வாழும் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், உணவில்லாமல் மருந்தில்லாமல், போதிய இருப்பிட வசதியில்லாமல், பெற்றோர்களில்லாமல் தவிக்கும் நிலையை சம்பந்தப்பட்டோரின் கவனத்துக்குக் கொண்டு வரும் பொருட்டு இலங்கையில் உள்ள சகல மக்களும் தவறாது இந்தப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்று டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா கேட்டுள்ளார். (அ-6)

# மடுத்தேவாலயப் பகுதியிலிருந்து படையினரை விலக்க இணக்கம்

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஏப்ரல் 26

மடுத் தேவாலயப் பிரதேசத்தில் இருந்து படையினரை விலக்கி வைக்க ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கஇணங்கியுள்ளார் என்று மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசெப் தெரிவித்தார்.

ஆயர்கள் மன்றச் செயலாளரும், இரத்தினபுரி மறைமாவட்ட ஆயருமான வண. மல்கம் ரஞ்சித் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார்.

மடுப்பிரதேசத்தில் இருந்து படையினரை வாபஸ் பெற வேண்டும் என்று அப்பொழுது ஆயர் ஜனாதிபதியிடம் கோரினார்.

மடுப்பிரதேசத்தில் இருந்து படையினரை விலக்கி வைக்க நடவடிக்கைஎடுப்பதாகவும்—

அதற்காக அங்கு ஒருவரை தாம் அனுப்புவதாகவும்—ஜனாதிபதி ஆயரிடம் தெரிவித்துள்ளார்.

''மடுவில் இருந்து படையினரை விலக்கி வைப்பதன் மூலம் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க முடியாது படையினர் முற்றாக வாபஸ் பெறப்பட வேண்டும்', என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் தெரிவித்தார். (இ-3-164)

# வன்னி அம்புலன்ஸ்சேவை மீண்டும் இன்று ஆரம்பம்

## நேற்றுவரை 9 பேர் உயிரிழப்பு

வவுனியா, ஏப்ரல் 26

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் உள்ள அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவுக்கு அழைத்து வர அம்புலன்ஸ் சேவையை இன்று மீண்டும் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு விஜயம் செய்த வடக்கு-கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவின் கோரிக்கையை அடுத்து வவுனியா படைத்தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இந்த அனுமதியை வழங்கினார்.

ஆளுநர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பத்திரிகையாளர் உயிலங்குளம் ஊடாக அம்புலன்ஸ் வாகனங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையால் நேற்றுவரை 9 பேர் அங்கு உயிரிழந்தனர் எனத் தெரிவித்தனர்.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தளபதி சாந்த கொட்டக் கொடவிடம் ஆளுநர் இது குறித்து பிரஸ்தாபித்ததை அடுத்தே அம்புலன்ஸ் சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

செஞ்சிலுவைச்சங்க வவுனியாக் கிளையின் அம்புலன்ஸ் வாகனங்கள் இன்று வன்னிப் பகுதிக்குச் சென்று நோயாளர்களை ஏற்றிவரும். [இ-3-164]

# ஆயுதக் கப்பல் ஒன்றைக் கடத்த புலிகள் திட்டமிடுகின்றனராம்

கொழும்பு, ஏப்ரல் 26

இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்கள் ஏற்றி வரும் கப்பல் ஒன்றைக் கடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனுடன் கலந்தாலோசனை நடத்த அந்த அமைப்பின் சர்வதேச ஆயுதப் பிரிவைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் வன்னி சென்றிருந்தனர் என்றும்—

இந்தத் திட்டம் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்திவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

சிம்பாப்வேயில் இருந்து இலங்கை அரசுக்கு 32 ஆயிரம் ஷெல்கள் ஏற்றிவந்த கப்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் முன்னர் கடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகள் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் இந்த காவல் நிலையகங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்றும்—

தாக்குதலை முறியடிக்க பொலீஸாரும் மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்களைப் பயன்படுத்தினர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பினருக்குமிடையில் 45 நிமிடங்கள் மோதல் நீடித்தது.

இந்த மோதலின்போது வீடுகளில் ஷெல் விழுந்து வெடித்துச் சிதறியபோதே இரு பெண்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 10 பேர் துப்பாக்கிச்சூடு காரணமாக காயம் அடைந்தனர் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

எயது புதிய
வீடியோ வெளியீடு!
சசிகுமார் - சௌந்தர்யா
நடிக்கும்
எங்க வீடு
மஹாலட்சுமி
அடுத்த வெளியீடு!
மோனிசா
என் மோனலிசா
வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.
(சி/7308)

### இரத்தினபுரி...

(முதலாம் பக்கத் தொடர்)

பற்றுவர்.

மடுவில் விசேட பிரார்த்தனைகளில் ஈடுபடும் இந்தக் குழு அங்கு நாளை மறுதினம் வரை தங்கியிருக்கும்.

ஆயர் மல்கம் ரஞ்சித் இன்றே கொழும்பு திரும்புவார்.

மடுவை இராணுவம் கைப்பற்றிய பின்னர் தெற்கில் இருந்து செல்லும் முதலாவது குழு இதுவாகும். (இ-3-164)

### அன்ரன்...

(முதலாம் பக்கத் தொடர்)

ருந்தார் என்றும் —

சிகிச்சை பெறுவதற்காக அவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார் என்றும் —

அங்கு அவர் அவசர சிகிச்சையை தற்சமயம் பெற்று வருகின்றார் என்றும் — அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

SUBRA
சித்தன்கேணி.
கணக்கீடு 2000 A/L
பங்குடைமை
ஆரம்பம்:- 28- 04 - 99
(புதன் 4-00 மணி)
ஆசிரியர்:
D. SAM
(65086)

## மேதினக் கூட்டம்

திருநெல்வேலி, ஏப்ரல் 26

இலங்கை ஆசிரியர் சங்க வடமாகாணகிளை, ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்தும் மேதினக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள 'சிற்றிஹோல்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வங்கி ஊழியர் சங்கம், வடக்கு— கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களின் அனுசரணையுடன் நடத்தப்படும் இக் கூட்டத்திற்கு வடமாகாண ஆசிரிய சங்கக் கிளைத் தலைவர் மு. கந்தசாமி தலைமை வகிப்பார்.

### கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினர் தரப்பில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் — படையினர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-6-ரி]

### சனத்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் மனைவி வைத்திருக்கவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஜெயசூரியாவின் திருமணத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் விவாகப் பதிவுக்கு சாட்சிகளாக கையொப்பம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# விஜேவீராவின் மனைவி அமைச்சர்களுடன் சந்திப்பு

## ஜனாதிபதி வாசஸ்தலத்தில்

திருகோணமலை கடற்படைத்தளத்தில்இருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ள றோஹண விஜேவீராவின் மனைவி சித்திராங்கனியை ஜனாதிபதியின் வாசஸ் தலத்தில் வைத்து சிரேஷ்ட அமைச்சர்கள் சந்தித்து உரையாடினர்.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு அழைக்கப்பட்ட சித்திராங்கனியை ஜனாதிபதியின் செயலர் பாலபட்டபெண்டி மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் சந்தித்து தென்மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

ஐ. தே. க. காலத்தில் நடந்த கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சித்திராங்கனியை தமது மேடைகளில் பேச வைக்க அவர்கள் முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

ஜே. வி. பி. க்கு எதிராக அறிக்கை விடுமாறு அவரிடம் கேட்கப்பட்டதாகவும்—

அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்து விட்டார் என்றும் – கூறப்பட்டது. (இ-3)

### மாற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

பின் விவரம் தெரியவரவில்லை.

இந்தச் சந்திப்பை அடுத்து பிரதமர் வாஜ்பாய் இன்று காலை அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுகிறார்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய அறிவிப்பு ஏதாவது வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாற்று அரசு அமைப்பதற்குப் போதுமான உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவதற்குத் தாம் கடந்த சில நாள்களாக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டுவிட்டன என்றும் —

சில கட்சிகள் தேச நலனைவிட சொந்த நலனிலேயே அக்கறை கொண்டிருப்பதாகவும் சோனியா காந்தி குற்றஞ்சாட்டினார்.

காங்கிரஸ் தலைமையிலான மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்குச் சமாஜவாதிக் கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் ஆதரவு வழங்க மறுத்ததை அடுத்தே காங்கிரஸ் தனது முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்குவங்காள முதலமைச்சர் ஜோதிபாஸு தலைமையில் மூன்றாவது அணி மாற்று அரசு அமைக்கும் பட்சத்தில் அதனை ஆதரிக்கத் தயார் என்று முலாயம் சிங் யாதவ் தெரிவித்தார்.

இதற்கிடையில் பாரதீய ஜனதாக்கட்சி தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் பிரமோத் மகஜன் தெரிவித்துள்ளார்.

### விமானத்...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளின் தாக்குதலின் போது விமானப்படை முகாம் எல்லைக்குள் மூன்று மோட்டார் குண்டுகள் வீழ்ந்து வெடித்த போதிலும் விமானப்படைக்கு சேதம் ஏற்படவில்லை என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விமானப் படையினரின் பதில் தாக்குதலின்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி இதுவரை தகவல் கிடைக்கவில்லை. (இ-21)

இப்பத்திரிகை நியூஉதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org